**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**O.S. No.41/2019**

**01.04.2025**

**P.W.1- தங்கப்பாண்டி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1ம் வாதி எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். 1ம் வாதியின் மனைவி உமாராணி 3ம் வாதி என்றால் சரிதான். 1ம் வாதிக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். அவரது பிள்ளைகளை கட்சிக்காரர்களாக சேர்க்கவில்லை என்றால் தீபிகா, ஞானதேவி, கௌதம், கார்த்திகா ஆகியோர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். மேற்படியார்கள் மைனர் குழந்தைகள் என்றால் தற்போது மேஜராகியுள்ளார்கள். 6, 7 பிரதிவாதிகளுக்கு 3ம் வாதியை கார்டியனாக போட்டுள்ளேன் என்றால் சரிதான். 2009ம் ஆண்டு ஏற்படுத்திய கிரைய ஆவணம் செல்லாது என அறிவிக்ககோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஆவணத்தை எங்களது பவர்தாரர் மாணிக்கம், கணேசனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆகும். தாவா சொத்தும், பக்கத்தில் உள்ள சொத்தும் எனக்கும், எனது சகோதரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தையும், அதற்கு அருகில் உள்ள சொத்தையும் கிரையம் கொடுப்பதற்கு ஜெயக்குமார் என்பவருக்கு 21.10.2003ல் பொது அதிகாரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். அதே தேதியில் தாவா சொத்தையும், அருகில் உள்ள இரண்டு சொத்துக்களை சேர்த்து மாணிக்கம் என்பவருக்கு விற்பனை உடன்படிக்கை ஆவணம் நானும், எனது சகோதரரும் எழுதிக்கொடுத்தோம் என்றால் பெயரளவில் எழுதிக்கொடுத்தோம். எங்களது பொது அதிகார முகவர், கணேசன் என்பவருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் 1வது இலக்க சொத்தை பொருத்து எனது சகோதரர் எல்ஐசியில் கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கணேசன் சொத்தை கிரையம் பெற்ற விவரம் கிரையம் ஏற்பட்ட 1 வருடத்திற்கு பின்பு தெரியவந்தது. மேற்படி கிரைய ஆவணம் 2009ல் ஏற்பட்டது. 2009ல் எல்ஐசியில்

ஏலத்திற்கு வரும்போது தெரியவந்தது. மேற்படி ஏலத்தில் கணேசன் தான் சொத்தை ஏலம் எடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் எழுதிக்கொடுத் பொது அதிகார ஆவணத்தில் தாவா சொத்தை எல்ஐசியில் வைத்து கடன் பெற்ற விவரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஏலத்தில் 1ம் பிரதிவாதி ரூ.6,40,000 கடனை செலுத்தி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். நானும், எனது சகோதரரும் எல்ஐசியில் பணம் கட்ட தவறியதால் சொத்து ஏலத்திற்கு வந்தது என்றால் சரிதான். நான், 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டதால், 1ம் பிரதிவாதியை ஏமாற்றிவிட்டோம் என்ற அடிப்படையில் எல்ஐசியில் கடன ் தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்துவிட்டோம் என்றால் சரியல்ல. எல்ஐசி மூலம் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை ஏலம் எடுத்ததால் தாவா சொத்தின் அனுபவம் 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கெதிராக தாவா சொத்தின் அனுபவத்தை ஒப்படைக்க உரிமையியல் நீதிமன்றத்தில் ஆர்சிஓபி.1-2012 என வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியிடம் சொத்தை ஒப்படைக்க கோரி உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தில் ஆர்சிஏ.1-2021 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீடு 17.04.2024ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தள்ளுபடி உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் மேற்படி ஆர்சிஓபி உத்தரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் ஆர்சிஓபி.1-2012 வழக்கில் நிறைவேற்றுதல் மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் உள்ள கடன் வசூல் தீர்ப்பாயம் முடிவுக்கு வந்தது என்றால் சரிதான். அங்கும் நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடியாகியுள்ளது என்றால ் சரிதான். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு மேல்முறையீடு செய்யவில்லை என்றால் மிரட்டியதால் செய்யவில்லை. வழக்கிற்காக மிரட்டியதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5ன் மேல் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினார்கள். வழக்கு சொத்தை சரியான கிரையம் கொடுத்துவிட்டு தற்போது சொத்தின் அனுபவத்தை



கொடுக்காமல் இருப்பதற்காக ஒன்றிற்கு மேல் ஒன்றாக வழக்கு தாக்கல் செய்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.